Regional Bulletin / Puducherry / Tamil Script / 26-04-2024

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி : 26.04.2024 நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

கேரளா-கர்நாடகா உட்பட 13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 88 தொகுதிகளில் இன்று, 2 ஆம் கட்ட மக்களவை தேர்தல் வாக்குப்பதிவு, விறுவிறுப்பாக நடைபெற்றது.

பிரதமரும் மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி இன்று மேற்கு வங்கம் மற்றும் பீகாரில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

கிழக்கு மற்றும் தெற்கு தீபகற்ப இந்தியாவில், அடுத்த 4 நாட்களுக்கு தீவிர வெப்ப அலை வீசும் என இந்திய வானிலை ஆய்வுத்துறை தெரிவித்துள்ளது.

புதுச்சேரியில் வெயிலை சமாளிக்க எல்லா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் ஸ்ரீராமுலு தெரிவித்துள்ளார்.

தேர்தல் 1 (19)

கேரளா-கர்நாடகா உட்பட 13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 88 தொகுதிகளில் இன்று, 2 ஆம் கட்ட மக்களவை தேர்தல் வாக்குப்பதிவு, விறுவிறுப்பாக நடைபெற்றது. கேரளத்தின் அனைத்து 20 தொகுதிகளும், கர்நாடகத்தில் 14, ராஜஸ்தானில் 13, மகராஷ்டிரா மற்றும் உத்திரபிரதேசத்தில் தலா 8, மத்திய பிரதேசத்தில் 6, அசாம் மற்றும் பீகாரில் தலா 5, சட்டீஸ்கர் மற்றும் மேற்கு வங்கத்தில் தலா 3 தொகுதிகளும், மணிப்பூர்-திரிபுரா மற்றும் ஜம்மு-காஷ்மீரில் தலா 1 தொகுதியும் இதில் அடங்கும். இன்றைய தேர்தலின் போது, பிற்பகல் 3 மணி நிலவரப்படி, கேரளத்தில் சுமார் 52 சதவிகித வாக்குகளும், கர்நாடகத்தில் சுமார் 51 சதவிகித வாக்குகளும் பதிவானதாக பூர்வாங்கமாக மதிப்பிடப்பட்டுள்ளது. ராஜஸ்தானில் வாக்குப்பதிவு, சுமார் 50

சதவிகிதமாகவும், உத்திரபிரதேசத்தில் சுமார் 44, சட்டீஸ்கரில் சுமார் 64, மற்றும், மேற்கு வங்கத்தில் சுமார் 61 சதவிகிதமாகவும் இருந்தது.

இன்றைய, 2 ஆம் கட்ட மக்களவை தேர்தலில், மொத்தம் ஆயிரத்து 198 வேட்பாளர்கள் போட்டிக் களத்தில் இருந்தனர். முக்கிய வேட்பாளர்களில், கேரள மாநிலம் வயநாடு தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் திரு ராகுல்காந்தி, திருவனந்தபுரம் பிஜேபி வேட்பாளர் திரு ராஜீவ் சந்திரசேகர், கர்நாடக மாநிலம் பெங்களுரு தெற்கு தொகுதியில் பிஜேபி வேட்பாளர் திரு தேஜஸ்வி சூர்யா உள்ளிட்டோர் அடங்குவர்.

தேர்தல் 2 (18)

இதற்கிடையே, 13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 96 தொகுதிகளில் அடுத்தமாதம் 7 ஆம் தேதி நடைபெற உள்ள, 3-ஆம் கட்ட மக்களவை தேர்தலுக்கான பிரச்சாரம், சம்பந்தப்பட்ட தொகுதிகளில் நடைபெற்று வருகிறது. குஜராத் மாநிலத்தின் அனைத்து 25 மக்களவை தொகுதிகளும் இதில் அடங்கும். 10 மாநிலங்கள் மற்றும் யூனியன்

பிரதேசங்களை சேர்ந்த 96 தொகுதிகளில் மே 13 ஆம் தேதி நடைபெற உள்ள 4 ஆம் கட்ட மக்களவை தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல், நேற்று முடிவடைந்ததை தொடர்ந்து, வேட்பு மனு பரிசீலனை இன்று நடைபெற்றது. ஏற்கப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. 8 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 49 தொகுதிகளில் அடுத்த மாதம் 20 ஆம் தேதி நடைபெற உள்ள 5 ஆம் கட்ட மக்களவை தேர்தலுக்கான, தேர்தல் அறிவிக்கை இன்று வெளியிடப்பட்டு, வேட்பு மனு தாக்கல் தொடங்கி உள்ளது. உத்திரபிரதேசத்தில் 14 தொகுதிகளும், மகராஷ்டிராவில் 13, மேற்கு வங்கத்தில் 7, ஒடிசா மற்றும் பீகாரில் தலா 5, மற்றும் ஜார்கண்டில் 3 தொகுதிகளும், ஜம்மு-காஷ்மீர் மற்றும் லடாக்கில் தலா ஒரு தொகுதியும் இதில் அடங்கும். இது அல்லாது, ஒடிசாவில் 4 கட்ட சட்டமன்ற தேர்தலுக்கான 2 ஆம் கட்ட வேட்பு மனு தாக்கலும் இன்று தொடங்கி உள்ளது.

மோடி (18)

3 ஆம் கட்ட மக்களவை தேர்தலின் ஒரு பகுதியாக, மே 7 ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ள மேற்கு வங்க மாநிலம் வடக்கு மால்டா மற்றும் தெற்கு மால்டா தொகுதிகளில், பிரதமரும் மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். மேற்கு வங்கத்தில் பள்ளிப் பணியாளர் தேர்வாணையம் மூலமான ஆள் சேர்ப்பை, அண்மையில் கொல்கத்தா உயர் நீதிமன்றம் ரத்து செய்திருப்பதை அவர் சுட்டிக்காட்டி, இதில், 25 ஆயிரம் பேர் வேலை இழந்ததற்கு, ஆளும் திரிணாமூல் காங்கிரசின் தவறான நிர்வாகமே காரணம் என்றார். திரிணாமூல் காங்கிரஸ் ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்றும், சந்தேஷ்காளி சம்பவமே இதற்கு சான்றாகும் என்றும் பிரதமர் கூறினார். மக்களுக்கான மத்திய அரசின் பல்வேறு நலத்திட்டங்களை மேற்கு வங்கத்தில் திரிணாமுல் காங்கிரஸ் அரசு அமல்படுத்த வில்லை என்றும், பிஜேபி ஆட்சிக்கு வந்தால் தான் மோடி அரசு மூலமான வளர்ச்சியை மேற்கு வங்க மக்கள் காண முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். மேற்கு வங்கம் பின்தங்கினால் இந்தியா முன்னேற

முடியாது என்று அவர் மேலும் கூறினார். தொடர்ந்து பீகார் மாநிலம் அராரியா, மற்றும், முங்கேர் தொகுதிகளிலும், பிரதமர் திரு நரேந்திர மோடி தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

*மம்தா* (7)

இதற்கிடையே, மேற்கு வங்கத்தில் 25 பள்ளி பணியிடங்கள் நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டது குறித்து திரிணாமுல் காங்கிரஸ் தலைவரும், மாநில முதலமைச்சருமான செல்வி மம்தா பானர்ஜி கவலை வெளியிட்டுள்ளார். சம்பந்தப்பட்டவர்கள் தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்படுவதை தடுப்பதற்கான, பாரதிய ஜனதாவின் அப்பட்டமான தந்திரம் இது என்று, அவர் இன்று மேதினிபூர் மக்களவை தொகுதியில், தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

*விவி-பாட்* 1(13)

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மூலமான வாக்குப் பதிவின் போது, விவி-பாட் காகித தணிக்கை இயந்திரங்களால் அச்சிட்டு காட்டப்படும் எல்லா ஒப்புகை சீட்டுகளையும் வாக்கு

எண்ணிக்கையின் போது எண்ணி சரிபார்க்க வேண்டும் என கோரிய மனுக்களை உச்சநீதிமன்றம் நிராகரித்துள்ளது. நீதிபதிகள் திரு சஞ்சீவ் கன்னா, திரு தீபாங்கர் தத்தா ஆகியோர் அடங்கிய அமர்வு இன்று இவ்வாறு தீர்ப்பளித்தது. இம்மனுக்கள் மீது கடந்த 18 ஆம் தேதி விசாரணை முடிந்து, தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்ட நிலையில், நீதிமன்றம் கடந்த 24 ஆம் தேதி தேர்தல் ஆணையத்திடம், தொழில்நுட்ப ரீதியிலான சில விளக்கங்களை கோரியிருந்தது. இதற்கான, ஆணையத்தின் பதிலை பரிசீலித்த பின்னர் நீதிமன்றத்தின் இன்றைய தீர்ப்பு வெளியாகி உள்ளது. மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ள போதிலும் நீதிமன்றத்தின் தீர்ப்பில் தேர்தல் ஆணையத்திற்கு 2 உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

*விவி-பாட் 2 (8)*

மின்னனு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் தேர்தல் சின்னங்களை ஏற்றிய பின்னர், இதற்கான பிரத்யேக

உபகரணங்களை தனியாக சீலிட்டு, வாக்கு எண்ணிக்கை முடிந்த 45 நாள் வரை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்பதும், தேர்தலில் 2 ஆம் இடம் அல்லது 3 ஆம் இடம் பெற்ற வேட்பாளர்கள், வாக்கு எண்ணிக்கை முடிந்த 7 நாட்களுக்குள் எழுத்து மூலம் விண்ணப்பித்தால், 5 சதவிகித மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் மைக்ரோ-கன்ட்ரோலர்களை, பொறியாளர்கள் மூலம் சரிபார்க்க வேண்டும் என்பதும் இதில் அடங்கும்.

வானிலை (12)

கிழக்கு மற்றும் தெற்கு தீபகற்ப இந்தியாவில், அடுத்த 4 நாட்களுக்கு தீவிர வெப்ப அலை வீசும் என இந்திய வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது. பீகார், ஜார்கண்ட், தெலங்கானா, கடலோர ஆந்திரா மற்றும் புதுச்சேரியின் ஏனாம் பகுதியில் வரும் 30 ஆம் தேதி வரை வெப்ப அலை நீடிக்கும் என்றும், தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, மாகே, காரைக்கால்

உள்ளிட்ட பகுதிகளில் வரும் 28 ஆம் தேதி வரை வெப்பமும், ஈரப்பதமும் அதிகமாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக ஈரோட்டில் 42.2 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலை பதிவாகி உள்ளது. திருபத்தூரில் வெப்ப நிலை 41.8 டிகிரியாகவும், சேலத்தில் 41.7 டிகிரியாகவும் பதிவாகி உள்ளது. கடலோர பகுதிகள் மற்றும் புதுச்சேரி காரைக்கால் பகுதிகளில் வெப்ப நிலை, 34 டிகிரி முதல் 38 டிகிரி செல்சியசாக இருந்தது.

*ஸ்ரீராமுலு 1* (15)

புதுச்சேரியில் வெப்ப அலை இல்லை என்றாலும் ஏனாமில் வெப்ப அலைக்கு வாய்ப்பு இருப்பதால் நிலைமைகளை சமாளிக்க எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் ஸ்ரீராமுலு தெரிவித்துள்ளார். இன்று எமது செய்தியாளரிடம் இதுகுறித்து தெரிவித்த அவர், நண்பகல் 12 மணி முதல் மாலை 4 மணி வரை வெளியே செல்வதை மக்கள்

தவிர்க்க வேண்டும் என்றார். குறிப்பாக வயதானவர்கள், குழந்தைகள், கருவுற்ற தாய்மார்கள் மற்றும் இணை நோய் உள்ளவர்கள் வெப்பத்தின் தாக்கத்தில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றும், வெயில் நேரத்தில் அவசியமாக வெளியில் செல்ல நேரிட்டால் தவறாமல் தொப்பி அல்லது குடை பயன்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

கோடையில் அனைவரும் போதிய அளவில் நீர் அருந்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, புதுச்சேரியில் வெப்பத்தின் தாக்கத்தை சமாளிக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக டாக்டர் ஸ்ரீராமுலு தெரிவித்தார்.

*ஸ்ரீராமுலு 2* (16)

வெப்பத்தின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பது குறித்து, டாக்டர்கள், செவிலியர்கள், ஆஷா பணியாளர்கள் மற்றும் ஏஎன்எம் ஊழியர்களுக்கு

பயிற்சிஅளிக்கப்பட்டுள்ளதாகவும், ஆரம்ப சுகாதார நிலையங்களில், நீர், மோர் மற்றும் ஓஆர்எஸ் கரைசல் வழங்கப்படுவதாகவும் அவர் கூறினார். நிலவரங்களை சமாளிப்பது குறித்து அனைத்து அரசு துறைகளுக்கும் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டு வருவதாகவும், தலைமை செயலர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் அவ்வப்போது நிலவரங்களை மறு ஆய்வு செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். புதுச்சேரியில் பறவைக் காய்ச்சல் இல்லை என்றாலும், நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப் படுவதாக டாக்டர் ஸ்ரீராமுலு மேலும் கூறினார். இதற்கிடையே, புதுச்சேரியில் வெயில் அதிகரிப்பு காரணமாக அனைத்து பள்ளிகளுக்கும் முன்கூட்டியே விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளுக்கும் வரும் 29 ஆம் தேதி முதல், கோடை விடுமுறை தொடங்கும் என்றும், கோடை விடுமுறைக்கு பின்னர் ஜூன் 6 ஆம் தேதி பள்ளிகள் மீண்டும் திறக்கப்படும் என்றும் பள்ளி கல்வி இயக்ககம் அறிவித்துள்ளது.

ஏனாம் (9)

புதுச்சேரி அரசின் பள்ளி கல்வித்துறை இயக்குநர் திருமதி பிரியதர்ஷிணி இன்று ஏனாமில் பல்வேறு அரசு பள்ளிகளை நேரில் பார்வையிட்டு, கல்வி தரத்தை உயர்த்துவது குறித்து ஆய்வு மேற்கொண்டார். மத்திய சமையல்கூடத்தில் தயாரித்து அனுப்பப்படும் உணவை அவர் சுவைத்துப் பார்த்து, உணவின் தரம் குறித்து மாணவர்களிடம் பேசினார். ஏனாமில் உள்ள அரசு பள்ளிகள் ஆந்திர கல்வி வாரியத்தின் பாடத் திட்டத்தில் இருந்து, சிபிஎஸ்இ பாடத்திட்டத்திற்கு மாறிய பின்னர் பள்ளி கல்வித்துறை இயக்குநர் ஏனாமிற்கு பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறை என்று எமது ஏனாம நிருபர் தெரிவிக்கிறார்.

தன்கர் (8)

குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் இன்று ஆந்திர மாநிலம் திருப்பதியில் தேசிய சமஸ்கிருத பல்கலைக்கழகத்தின் 3 ஆவது பட்டமளிப்பு விழாவில், தலைமை

விருந்தினராக கலந்து கொள்கிறார். இதற்கென திருப்பதி வந்துள்ள அவர் இன்று பிற்பகல் தமது மனைவியுடன், திருப்பதி வெங்கடேஸ்வரர் கோவிலில் தரிசனம் செய்தார். முன்னதாக, ஒரு நாள் பயணமாக ரேணிகுண்டா விமான நிலையத்தில் வந்திறங்கிய குடியரசு துணைத் தலைவரை, ஆந்திர ஆளுநர் திரு அப்துல் நசீர் மற்றும் மாநில அரசு அதிகாரிகள் அன்புடன் வரவேற்றனர்.

ஐபிஎல் (5)

ஐபிஎல் கிரிக்கெட்டில் இன்று இரவு 7.30 மணிக்கு கொல்கத்தாவில் நடைபெறும் போட்டியில், கொல்கத்தா-பஞ்சாப் அணிகள் மோத உள்ளன. நேற்று இரவு, பெங்களூர்-ஐதராபாத் அணிகளுக்கு இடையே, ஐதராபாத்தில் நடைபெற்ற போட்டியில் பெங்களூரு அணி 35 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆயுதப்பரவல் (12)

படைக் குறைப்பு மற்றும் ஆயுதப் பரவல் தடுப்பு குறித்து, இந்தியாவிற்கும், தென்கொரியாவிற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் சியோலில் இன்று நடைபெற்றன. அணு ஆயுதங்கள், ரசாயன ஆயுதங்கள் மற்றும் உயிரியல் ஆயுதங்களின் பரவலை தடுப்பதில் இதுவரை எட்டப்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும், பிராந்திய அளவில் இதில் உள்ள பிரச்சனைகள் மற்றும் ஆயுத ஏற்றுமதிக்கான கட்டுப்பாட்டு விதிமுறைகள் குறித்தும் இதில் விவாதிக்கப்பட்டது. பேச்சுவார்த்தைகளுக்கான இந்திய குழுவிற்கு வெளியுறவு அமைச்சகத்தின் படைக்குறைப்பு இணைச் செயலர் திருமதி முவான்புயி சையாவி தலைமையேற்றார். தென்கொரிய குழுவினர் அந்நாட்டு வெளியுறவு அமைச்சகத்தின் படைக்குறைப்பு தலைமை இயக்குநர் திரு யுவான் ஜாங் குவான் தலைமையில் பேச்சுவார்த்தையில் பங்கேற்றனர்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

கேரளா-கர்நாடகா உட்பட 13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 88 தொகுதிகளில் இன்று, 2 ஆம் கட்ட மக்களவை தேர்தல் வாக்குப்பதிவு, விறுவிறுப்பாக நடைபெற்றது.

பிரதமரும் மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி இன்று மேற்கு வங்கம் மற்றும் பீகாரில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

கிழக்கு மற்றும் தெற்கு தீபகற்ப இந்தியாவில், அடுத்த 4 நாட்களுக்கு தீவிர வெப்ப அலை வீசும் என இந்திய வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது.

புதுச்சேரியில் வெயிலை சமாளிக்க எல்லா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் ஸ்ரீராமுலு தெரிவித்துள்ளார்.

---------